மழைநீர் சேமிப்போம்"" பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் ""

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 24.07.2026

**நகர்மன்ற சாதாரணகூட்டம்**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், ஆடிமாதம் 15-ம் நாள் 31.07.2026-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்டரங்கில் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஒம்)பா.ரேணுப்பிரியா
நகர்மன்றத்தலைவர்,
தேனி -அல்லிநகரம் கராட்சி.

**பொருள் 01:**

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு -2027 முதற்கட்ட பணியாக (Phase-I) வீடுகளின் பட்டியல் , நகர் பகுதியின் வரைபடம் , வார்டு வாரியான வரைபடம் மற்றும் கணக்கெடுப்பாளர்கள் / மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள மாவட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர், தேனி அவர்களின் கடிதம் நக்எண்.G2/7799/2023 நாள்.12.06.2026 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கணக்கெடுப்பாளர்கள் / மேற்பார்வையாளர் களுக்கான இரண்டு கட்ட பயிற்சி முகாம் நடத்துதல், மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது-

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1686/2025/எப்1 .

**தீர்மான எண்**: 1263

**தீர்மானம்**: **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 02:**

தேனி-அல்லிநகரம் உள்ளூர் திட்டக்குழும எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு –D, பிளாக்-02, நகரளவு எண்கள் : 2 / 6, 2 /8 , 2 /9 மற்றும் 2 /10 ( பழைய சர்வே எண் .825 பகுதி ) இல் கட்டுப்பட்டுள்ள 3636.80 ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு நில உபயோக மாற்றம் செய்யக் கோரி மனுதாரர்கள் திரு . A.பிரதாப், திரு.M.அழகர்சாமி மற்றும் திருமதி . A.விஜயா ஆகியோர் விண்ணப்பித்துள்ளனர். மேற்படி இடமானது நகர் ஊரமைப்பு துறையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தின்படி (Master Plan) விவசாய உபயோக பகுதியில் அமைகிறது . மேற்படி இடத்தினை விவசாய உபயோக பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நில உபயோகமாற்றம் செய்வது தொடர்பாக தேனி மாவட்ட செய்தி மற்றும் மக்கள்தொடர்பு அலுவலர் மூலம்

தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டது . மேற்படி நில உபயோக மாற்றம் செய்வது தொடர்பாக நாளது தேதி வரை பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே மேற்படி இடத்தினை விவசாய உபயோக பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக நிலஉபயோக மாற்றம் செய்யவும் , தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் , உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , தேனி அவர்களின் வழிமுறையாக அரசு செயலாளர் , நகர் ஊரமைப்பு துறை , சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 1686/2025/எப்1)

**தீர்மான எண்**: 1264

**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் 03</u>:**

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு –C, பிளாக்-26, நகரளவு எண் : 39 /1A ( பழைய சர்வே எண்.1650 பகுதி ) இல் கட்டுப்பட்டுள்ள 1,325.00 ச.மீ பரப்பளவுள்ள இடத்தினை விவசாய உபயோக பகுதியிலிருந்து வணிக உபயோக பகுதியாக மாற்றம் செய்ய வேண்டி மனுதாரர் திரு.P.கோவிந்தராஜ் (தலைவர்) அல்லிநகரம் நாயுடு மஹாஜன சங்கம் சார்பாக விண்ணப்பித்துள்ளார். மேற்படி வரப்பெற்ற மனுவின் படி இடமானது நேராய்வு செய்யப்பட்டதில் நகர் ஊரமைப்பு துறையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.**5**-ன் படி விவசாய உபயோக பகுதியில் அமைகிறது. மேற்படி இடத்தினை விவசாய உபயோக பகுதியிலிருந்து வணிக உபயோக பகுதியாக வரைவு திட்ட மாற்றம் (Draft Variation) செய்யவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களின் வழி முறையாக நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 880/2026/எப்1)

**தீர்மான எண்**: 1265

**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் 04:</u>**

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு –E, பிளாக்-17, நகரளவு எண் : 22 /1B ( பழைய சர்வே எண்.275/2 பகுதி ) இல் கட்டுப்பட்டுள்ள 1,754.00 ச.மீ பரப்பளவுள்ள இடத்தினை விவசாய உபயோக பகுதியிலிருந்து வணிக உபயோக பகுதியாக மாற்றம் செய்ய வேண்டி மனுதாரரர் திருமதி.S.R.சரஸ்வதி (பவர் ஏஜெண்ட்) க/பெ கிருஷ்ணசாமி விண்ணப்பித்துள்ளார். மேற்படி வரப்பெற்ற மனுவின் படி இடமானது நேராய்வு செய்யப்பட்டதில் நகர் ஊரமைப்பு துறையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.**6**-ன் படி விவசாய உபயோக பகுதியில் அமைகிறது. மேற்படி இடத்தினை விவசாய உபயோக பகுதியிலிருந்து வணிக உபயோக பகுதியாக வரைவு திட்ட மாற்றம் (Draft Variation) செய்யவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களின் வழி முறையாக நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 2763/2026/எப்1)

**தீர்மான எண்**: 1266

**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் 05:</u>**

தேனி –அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு –C . பிளாக்-37 , நகரளவு எண்.2 இல் கட்டுப்பட்டுள்ள 581.00 ச.மீ பரப்ப்ளவுள்ள இடமானது , நகரளவை கணக்குகளின் படி, நிர்வாக அதிகாரி குடியிருப்பு என்ற பெயரில் தாக்கலாகியுள்ளது. மேற்படி இடத்தில் தற்போது நிலையில், ஆரம்பர சுகாதார நிலையம் கட்டிடம் செயல்பட்டு வருகிறது இந்நிலையில் ஏற்கனவே, மேற்படி இடத்தில் செயல்பட்டு வரும் மதி அங்காடிக்கு அருகில் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் , தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அவர்களின் கடித ந.க.எண்.835/2023/மதா.வ.(ம)/ வி.ச. நாள் 02.07.2026 கடிதத்தின் படி , 88.00 ச.அடி பரப்பளவில் மற்றொரு அங்காடி செயல்படுவதற்கு , மேற்படி துறைக்கு முன் நுழைவு அனுமதி , தரை வாடகை அடிப்படையில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.617/2025/எப் .1

**தீர்மான எண்**: 1267

**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 06:**

தேனி - அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு – இந்நகராட்சியின் 1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் தடுப்பூசி போடுவது தொடர்பாக தேனி மாவட்ட பிராணிகள் வதை தடுப்பு சங்க பொதுக்குழு கூட்டம் தேதி 11.03.2026-ம் தேதி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண் . 833 நாள் 29.07.2024 – ன்படியும் தெருநாய்கள் கருத்தடை சிகிச்சை திட்டம் – நிதி முன்மொழிவு – கால்நடை பராமாரிப்பு துறையில் வழங்கப்பட்டதன் அடிப்படையில், அரசாணை எண் (4D) NO: 1 நாள்17.03.2023 இன்படி நாய் ஒன்றுக்கு அறுவை சிகிச்சை செய்து தடுப்பூசி போட செலவினம் ரூ 1,650/- வீதம், கால்நடை பராமாரிப்புத்துறை தேனி அவர்களின் கணக்கெடுப்பின்படி நகராட்சி பகுதிகளில் உள்ள மொத்த நாய்களின் எண்ணிக்கை 1091 இதில் 2023 ஆம் ஆண்டிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை 405 நாய்களுக்கு செய்யப்பட்டது. போக மீதமுள்ள 686 தெருநாய்களுக்கு கால்நடை பராமரிப்பு துறையால் வழங்கப்பட்ட வழிகாட்ட நெறிமுறைகளின் படி கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய உத்தேக செலவினம் 12,00,000/- (ரூபாய் பன்னிரெண்டு லட்சம் மட்டும்) – ற்கு அனுமதி வழங்கப்பட்டு அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

மேற்படி தொகை முழுவதும் செலவினம் செய்யப்படாத நிலையில் 2026 - 2027 ஆம் ஆண்டிற்கு தெருநாய்களுக்கு , கால்நடை பராமரிப்பு துறையினராலோ அல்லது அரசு சாரா நிறுவனம் மூலம் கருத்தடை செய்து தடுப்பூசி போட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தொகையினை 2025 – 2026 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலேயே மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்** 1705/2021/**எச்**-1

**தீர்மான எண்**: 1268

**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 07:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந .க.எண்.**DMA /1196/2026**-ன் அறிவுறுத்தலின்படி, திடக்கழிவு மேலாண்மை பணிகள் இந்நகராட்சியில் ஏற்கனவே மேற்கொண்ட Raam&Co தனியார் நிறுவனத்திற்கு 30.06.2026 வரையில் காலநீட்டிப்பு செய்ய உத்திரவிடப்பட்டிருந்தது, தற்சமயம் **efile .NO.DMA /1196/2026 Dated : 02/06/2026** அன்று பெறப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ,இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஏற்கனவே மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனம் Raam& Co மதுரை அவர்களுக்கு KPI Norms முறையில் 31.08.2026 வரையில் பணி செய்ய காலநீட்டிப்பு செய்திட உத்திரவிடப்பட்டுள்ளது . அதன் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்திரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கு

**அலுவலககுறிப்பு**

மன்றம்அனுமதிக்கலாம். ந.க.எண்: **3097/ 2025 /எச்-1**

**தீர்மான எண்**: 1269

**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 08:**

தேனி – அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு காய்ச்சல் , சிக்கன்குனியா, மலேரியா போன்ற நோய்கள் பரவுவதை தடுக்கவும் மற்றும் கொசுப்புழுக்கள் உற்பத்தியாவதை தடுக்கவும், எதிர்வரும் பருவமழைக் காலத்தில் கொசுக்கள் உருவாகும் தன்மை அதிகம் உள்ளதாலும், பொது மக்கள் நலன் கருதியும் , நகரின் பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் பொருட்டும் கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்வது அவசியமானதாக உள்ளது.

தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் 50 DBC தற்காலிக பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு PR Man Power Agency, உசிலம்பட்டி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு கொசுஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது . மேற்கண்ட பணிக்காலம் தற்போதுமுடிவடையும் நிலையில் , பொது மக்கள் நலன் கருதியும் , நகரின் பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் பொருட்டு கொசு ஒழிப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதியும் , கொசு ஒழிப்பு பணியினை மேலும் மூன்று மாதத்திற்கு அதே நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் , அதற்கான உத்தேசசெலவினம் ரூ.18.00/இலட்சத்தில்பணிமேற்கொள்ளமன்றஅனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1) **மன்றம் அனுமதிக்கலாம்.**
2) **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

ந.க.எண்.523/2026/எச்1

**தீர்மான எண்**: 1270
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 09:**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளைநகராட்சி உரக்கிடங்கில் உள்ள ட்ரோமல் இயந்திரம் மூலம் பிரிக்க இயலாக கழிவுகளை அறிவியில் முறைப்படி தரம் பிரித்தெடுக்கும் பணி DM Solutions, திருப்பத்தூர் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிலையில், ஒப்பந்த காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை மேலும் மூன்றுமாதத்திற்கு அதேநிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம்எண்: 1251நாள்: 10-03-2026-ல்அனுமதிக்கப்பட்டது.

தற்போது ஒப்பந்தகாலம் முடிவடைவதால் பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி மேலும் முன்று மாதகாலங்களுக்கு DM Solutions, திருப்பத்தூர் நிறுவனத்திற்கு கால நீட்டிப்பு செய்திடவும் அதற்கான செலவீனத்தை பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1) மன்றம்அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: **525 / 2025 /எச்-1**

**தீர்மான எண்**: 1271 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 10:**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளில் , நகராட்சி உரக்கிடங்கில் உள்ள ட்ரோமல் இயந்திரம் மூலம் பிரிக்க இயலாத கழிவுகளை அறிவியில் முறைப்படி தரம் பிரித்தெடுத்து RDF ஆக மாற்றி அதனை சிமெண்ட் தொழிற்சாலைக்கு லாரி மூலம் அனுப்பி வைக்கும் பணி DM Solutions, திருப்பத்தூர் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிலையில், ஒப்பந்தகாலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதி மேற்கண்ட பணியினை மேலும் மூன்று மாதத்திற்கு அதே நிறுவனம் மூலம் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம்எண்: 1252 நாள்: 10-03-2026-ல்அனுமதிக்கப்பட்டது.

தற்போது ஒப்பந்தகாலம் முடிவடைவதால் பொதுசுகாதாரம் அவசரஅவசியம் கருதி மேலும் முன்று மாத காலங்களுக்கு DM Solutions, திருப்பத்தூர் நிறுவனத்திற்கு கால நீட்டிப்பு செய்திடவும் அதற்கான செலவீனத்தை பொதுநிதியில் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலககுறிப்பு:**

1) மன்றம்அனுமதிக்கலாம்.
2) மேற்கண்டசெலவினத்தைநகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: **526/ 2025 /எச்-1**

**தீர்மான எண்**: 1272 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 11:**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA.IV) அரசாணை எண் .166 நாள்.23.11.2016 –ன்படி நகராட்சி பகுதிகளிலுள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளை சுத்தம் செய்யவும் கழிப்பறைகளை தூய்மையாக பராமரிக்கவும் துப்புரவு பணியாளர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து பெற்றுக்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டுள்ளது .அதன்படி இந்நகராட்சி பகுதிகளிலுள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளை சுத்தம் செய்யவும் கழிப்பறைகளை தூய்மையாக பராமரிக்கவும் துப்புரவு பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்யும் பொருட்டு 10 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணிகள் SWORD MAN POWER AGENCY நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ,தற்போது 31.07.2026–ல் மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் முடிவடையும் நிலையில் , பள்ளிமாணவர்களின் நலன்கருதி பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதியும் , பொதுசுகாதார பணியினைதொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி மேலும் மூன்று மாதத்திற்கு அதே நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் , அதற்கானஉத்தேசசெலவினம் ரூ,7.00/- இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றஅனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1) மன்றம்அனுமதிக்கலாம்
2) அதற்கானசெலவினத்தைநகராட்சிபொதுமற்றும்வருவாய்நிதியிலிருந்துமேற்கொள் ளமன்றம்அனுமதிக்கலாம். ந.க.எண்.524/2026/எச்1

**தீர்மான எண்**: 1273 ,,
**தீர்மானம்**: **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 12:**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந .க.எண்.2571/2017/ஜே1 நாள்.28-11-2017 டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவுவதை தடுக்கும் பொருட்டு கொசு ஒழிப்பு பணியாளர்களை 300 குடியிருப்புகளுக்கு ஒரு பணியாளர் வீதம் பணியமர்த்திக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதற் கிணங்க, தேனி -அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள 30,000 குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு 100 DBC பணியாளர்கள் தேவைப்படுகின்றனர் .இந்நகராட்சியின் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு முதற்கட்டமாக 60 தற்காலிக DBC பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள ஒப்பந்தம் கோரும் பொருட்டு தனியார் நிறுவனத்தின் மூலம் பணியாளர்கள் பெறுவதற்கு ஒப்பந்த புள்ளி கோரி நடவடிக்கை எடுத்திடவும் , தேனி மாவட்ட

ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந .க.எண்.10395/2026/e2 நாள்.12.06.2026-ன்படி தினக்கூலி 2025-2026 ஊதிய விகிதத்தின்படி பணியாளர் செலுத்த வேண்டிய ESI.EPF.INSURANCE ,UNIFORM பாதுகாப்பு உபகரணங்கள் சேர்த்து ஆறுமாதத்திற்கு 60 பணியாளர்களுக்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ 66.00/- இலட்சத்திற்கு பொது சுகதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவக குறிப்பு.**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) அதற்கானசெலவினத்தைநகராட்சிபொதுமற்றும் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளமன்றம்அனுமதிக்கலாம்.
3) மேற்படிபணிக்கானஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரத்திக்கான செலவினத்திைநகராட்சி பொது மற்றும் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.கஎண்.523/2026/எச்1</u>**

**தீர்மான எண்**: 1274 ,,
**தீர்மானம்**: **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் 13 :</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA.IV) அரசாணை எண் .166 நாள்.23.11.2016 -ன்படி நகராட்சி பகுதிகளிலுள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளை சுத்தம் செய்யவும் கழிப்பறைகளை தூய்மையாக பராமரிக்கவும் துப்புரவு பணியாளர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து பெற்றுக்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டுள்ளது .அதன்படி இந்நகராட்சி பகுதிகளிலுள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளை சுத்தம் செய்யவும் கழிப்பறைகளை தூய்மையாக பராமரிக்கவும் துப்புரவு பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்யும் பொருட்டு 10 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தம் கோரும் பொருட்டு ,தனியார் நிறுவனத்தின் மூலம் பணியாளர்கள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுத்திடவும் ,தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந .க.எண்.10395/2026/e2 நாள்.12.06.2026 -ன்படி தினக்கூலி பணியாளர்களுக்கான 2026-2027 ஊதிய விகிதத்தின்படிபணியாளர் செலுத்த வேண்டிய ESI.EPF.INSURANCE ,UNIFORMமற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் சேர்த்து ஆறு மாதத்திற்கு 10 பணியாளர்களுக்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ .14.77/- இலட்சத்திற்கு பொது சுகதாரப்ணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவக குறிப்பு.**

1) மன்றம்அனுமதிக்கலாம்

2) அதற்கானசெலவினத்தைநகராட்சி பொது மற்றும் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3) மேற்படிபணிக்கான ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரத்திக்கான செலவினத்தினை நகராட்சி பொது மற்றும் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.களண்.524/2026/எச்1**

**தீர்மான எண்**: 1275 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 14 :**

**தேனி-அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு** - 2026-2027**ஆம் ஆண்டிற்கு தேவையான பைரித்திரம் மற்றும் டெமிபாஸ்** (**அபேட்**) **இருப்பு தீர்ந்து விட்டது. தற்போது வட கிழக்கு பருவமழை தொடங்க இருப்பதால் பொது மக்களுக்கு டெங்கு மலேரியா போன்ற நோய் தொற்று ஏற்படா வண்ணம் இந்நகர பகுதிகளில் மேற்கண்ட புகை மருந்து அடிக்கவும் வீடு வீடாக அபேட் மருந்து ஊற்றவும் வேண்டியுள்ளது. எனவே தேவையான பைரித்திரம்** - 100 **லி மற்றும் டெமிபாஸ்** (**அபேட்**) - 150 **லி மற்றும் பினாயில்** - 500 **லி ஆகியவற்றினை** TNMS - **ல் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்திடவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ**.4.00/- **இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலககுறிப்பு:**

**மன்றம் அனுதிக்கலாம்**. (**ந.க.எண்**.528/2026/**எச்**-1)
**தீர்மான எண்**: 1276 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 15 :**

தேனி –அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு -2026-2027 ஆம் ஆண்டிற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு தூள் மற்றும் பிளிச்சிங் பவுடர் இருப்பு தீர்ந்து விட்டது .தற்போது வட கிழக்கு பருவமழை தொடங்க இருப்பதால் பொது மக்களுக்கு நோய்தொற்று ஏற்படா வண்ணம் இந்நகர பகுதிகளில் மேற்கண்ட கிருமிநசினி தெளிக்க வேண்டியுள்ளது . எனவே தேவையான நீர்த்த சுண்ணாம்பு தூள் -15டன் மற்றும் பிளிச்சிங் பவுடர் 5-டன் ஒப்பந்தபுள்ளி கோரி கொள்முதல் செய்திடவும் ,அதற்கான உத்தேச செலவீனம் ரூ .5.20/-இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்: **529/ 2026 /எச்-1**

**அலுவலககுறிப்பு:**

மன்றம்அனுமதிக்கலாம். ந.க.எண்: **529/ 2026 /எச்-1**

**தீர்மான எண்**: 1277 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 16 :**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் , கோயம்புத்தூருக்கு 2026-2027 ஆம் ஆண்டு இந்நகராட்சி பங்குத் தொகையாக ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் ) செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் 14.07.2026ம் தேதிய கடித ந.க.எண். 015/2026/A2 நாள்.14.07.2026 கடிதத்தில் தொகை செலுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது . எனவே தொகையினை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.360/2023/சி1

**தீர்மான எண்**: 1278 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 17 :**

தேனி-அல்லிநகரம் நகராட்சி 2026-2027-ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவுசெய்யலாம்.ந.க.எண். 3160/2026/ சி1

**தீர்மான எண்**: 1279 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 18 :**

**தேனி-அல்லிநகரம் நகராட்சி அலுவலகம் மற்றும் அறிவுசார் மையம்** (**நூலகம்**) **தினசரி நாளிதழ்கள் டிசம்பர்** 2025 **முதல் டிசம்பர்** 2026 **வரை விநியோகம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவிற்கு ரூ.**50,000/- **ஐம்பதாயிரம்மட்டும்**) **வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.**

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் : 168/ 2026 / எப்2**

**தீர்மான எண்**: 1280 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 19 :**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் மேற்கொள்ளும் திட்டப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை கீழ்காணும் நாளிதழ் நிறுவனங்களின் மூலம் பிரசுரம் செய்யப்பட்டதற்கு தொகை வழங்க கோரி சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களில் இருந்து கேட்பு பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விளம்பரம் மேற்கொண்ட நாளிதழ்கள் / நிறுவனத்தின் விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | மதுரைமாலைமுரசு( Bill Invoice No : MA-2627-0484 Date : 23.07.2026) | 7,245 |

மேற்கண்ட பட்டியல் தொகையினை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களுக்கு இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் : 3046 / 2026/ இ1**
**தீர்மான எண்**: 1281 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 20 :**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் மேற்கொள்ளும் திட்டப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை (பழைய உரக்கடங்கில் உள்ளதிடக் கழிவுகளை உயிரி அகழ்வாய்வு முறையில் பிரித்து அகற்றுதல் பணி) கீழ்காணும் நாளிதழ் நிறுவனங்களின் மூலம் பிரசுரம் செய்யப்பட்டதற்கு தொகை வழங்க கோரி சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களில் இருந்து கேட்பு பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விளம்பரம்மேற்கொண்டநாளிதழ்கள் / நிறுவனத்தின்விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | AdWise Advertising Private LTD (Invoice No:AAPL/CHN/388/25-26) | ரூ. 23,678 |

மேற்கண்ட பட்டியல் தொகையினை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களுக்கு இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி பணிக்கான செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் : 163 / 2018 / இ1**
**தீர்மான எண்**: 1282 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 21 :**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் மேற்கொள்ளும் திட்டப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை கீழ்காணும் நாளிதழ் நிறுவனங்களின் மூலம் பிரசுரம் செய்யப்பட்டதற்கு தொகை வழங்க கோரி சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களில் இருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விளம்பரம்மேற்கொண்டநாளிதழ்கள்/ நிறுவனத்தின்விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | மதுரைமணி( Bill Invoice No : 316 Date : 11.03.2026) | ரூ.19,344 |

மேற்கண்ட பட்டியல் தொகையினை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களுக்கு இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் பணிமேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் : 163 / 2018 / இ1**
**தீர்மான எண்**: 1283 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 22:**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு ஆண்டு குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளிவிலான தமிழ் நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்திமக்கள் தொடர்புதுறைஅனுமதிவிபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | Theekathir Media Pvt. Ltd.மதுரை (தீக்கதிர்) | எண் : MDU/55/26-27 நாள் : 23-06-2026. | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் , தேனி வெளியீட்டு ஆணை எண் : 159/2026/செ.ம.தொ.அ/தேனி நாள் : 22.06.2026. | ரூ: 13,650/- |
| 2 | Malar Publications Ltd.திண்டுக்கல் (மாலைமலர்) | எண் : DGL - D26060131 நாள் : 23-06-2026. | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் , தேனி வெளியீட்டு ஆணை எண் : 158/2026/செ.ம.தொ.அ/தேனி நாள் : 22.06.2026. | ரூ: 13,860/- |
| | | | **மொத்தம்** | **ரூ: 27,510/-** |

மேற்கண்ட தொகை ரூ : 27,510/- (ரூபாய்: இருபத்து ஏழு ஆயிரத்து ஐநூற்று பத்து மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 2386/2026/அ3 )

**தீர்மான எண்**: 1284 ,,

**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் 23 :</u>**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்மான மேற்குச் சந்தையில் கட்டப்படும் புதிக வணிக வளாக கடைகளுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளிவிலான தமிழ் நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்திமக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | Makkal Kural Newsmen Associates Pvt. Ltd.மதுரை (மக்கள் குரல்) | எண் : MDUMAB 262700228 நாள் : 23-06-2026. | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் , தேனி வெளியீட்டு ஆணை எண் : 157/2026/செ.ம.தொ.அ/தேனி நாள் : 22.06.2026. | ரூ: 20,412/- |
| | | | **மொத்தம்** | **ரூ: 20,412/-** |

மேற்கண்ட தொகை ரூ : 20,412/- (ரூபாய்: இருபது ஆயிரத்து நானூற்று பனிரெண்டு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2753/2024/அ3)

**தீர்மான எண்**: 1285 ,,

**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் 24 :</u>**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்குச் சந்தையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு 07 -07-2026 அன்று நடைபெற்ற முன்பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் **G பிளாக் கடை எண் :06** இனத்திற்கு கலந்து கொண்டவர்கள் கோரிய ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் பார்வைக்கும் உத்தரவிற்கும்

வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் | உட்சபட்ச ஏலக்கேள்வி (மாதம் ஒன்றுக்கு) (ரூபாய்) | ஒப்பந்தப்புள்ளி தொகை (மாதம் ஒன்றுக்கு) (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | பெசெந்தில் குமார்., த/பெ பெரியசாமி, 268/2 வார்டு 15 மிராண்டா லயன், 4வது தெரு, சிவராம் நகர், தேனி. | - | ரூ:3,300/- |
| 2 | பெராஜேஸ் கண்ணன்., த/பெ பெரியசாமி, 132/Aவார்டு 14 மிராண்டா லயன், 5வது தெரு, சிவராம் நகர், தேனி. | - | ரூ:2,800/- |

**அலுவலக குறிப்பு**:

அ) மேற்கண்ட இனத்திற் கு வரிசை எண் : 01-ல் கண்ட திரு. பெ.செந்தில் குமார் என்பவர் மாத வாடகையாக **ரூ:3,300/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியானது அரசு மதிப்பீட்டினை விட கூடுதலாக உள்ளதால் தனியரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் : 2753/2024/அ3)

**தீர்மான எண்**: 1286 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 25 :**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்குச் சந்தையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு 07-07-2026 அன்று நடைபெற்ற முன்பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளியில் **G பிளாக் கடை எண் :07** இனத்திற்கு கலந்துகொண்டவர்கள் கோரிய ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் பார்வைக்கும் உத்தரவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் | உட்சபட்ச ஏலக்கேள்வி (மாதம் ஒன்றுக்கு) (ரூபாய்) | ஒப்பந்தப்புள்ளி தொகை (மாதம் ஒன்றுக்கு) (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | பெசெந்தில் குமார்., த/பெ பெரியசாமி, 268/2வார்டு 15 மிராண்டா லயன், 4வது தெரு, சிவராம் நகர், தேனி. | - | ரூ:2,800/- |

| | | | |
|---|---|---|---|
| 2 | பெராஜேஸ் கண்ணன்.,<br>த/பெ பெரியசாமி,<br>132/Aவார்டு 14 மிராண்டா லயன்,<br>5வது தெரு, சிவராம் நகர், தேனி. | - | ரூ:3,300/- |

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மேற்கண்ட இனத்திற்க வரிசை எண் : 02-ல் கண்ட திரு. பெ.ராஜேஸ் கண்ணன் என்பவர் மாத வாடகையாக **ரூ:3,300/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியானது அரசு மதிப்பீட்டினை விட கூடுதலாக உள்ளதால் தனியரின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2753/2024/அ3)

**தீர்மான எண்**: 1287 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>**பொருள் 26**</u> **:**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய செகண்டரி பிளாக் தெற்கு பக்கம் கட்டண கழிப்பறை (மூணாறு பேருந்து நிறுத்தம் அருகில்)** குத்தகை இனத்திற்கு 20-02-2026 அன்று நடைபெற்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டவாறு ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.

| **வ. எண்** | **பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர்** | **உட்சபட்ச ஏலக்கேள்வி (ஆண்டு குத்தகை) (ரூபாய்)** | **ஒப்பந்தப்புள்ளி தொகை (ஆண்டு குத்தகை) (ரூபாய்)** |
|---|---|---|---|
| 1 | கவிஜயன்.,<br>த/பெகருப்பையா .. | - | ரூ:3,75,000/- |
| 2 | சிவிக்னேஷ்.,<br>த/பெசின்னதம்பி . | - | ரூ:4,60,000/- |
| 3 | வீஹரிகிருஷ்ணன்.,<br>த/பெவீரமுருகேந்திரராஜா . | - | ரூ:8,60,000/- |

மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண் 0 :3 ல் கண்ட-**திரு .வீ ஹரிகீருஷ்ணன்.**என்பவர் ஆண்டு குத்தகையாக **ரூ:8,60,000/-**உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார் இந்நிலையில் . : மூன்றாண்டு பொது ஏலக்கட்டுப்பாடு விதி நிபந்தனைகள் வரிசை எண் 12-ன் படி திரு பிரகாஷ்.கா . 24 என்பவர் மணி நேரத்திற்குள் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு கோரப்பட்ட உயர்ந்தபட்ச

ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு 10 சதவீதத்திற்கு கூடுதலாக நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டதன் அடிப்படையில், பொது ஏலக் கட்டுப்பாட்டு வதிகளின் படி மேற்கண்ட இனத்திற்கு 09-07-2026 அன்று நடைபெற்ற மறு பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உட்சபட்ச ஏலக்கேள்வி (ஆண்டு குத்தகை) (ரூபாய்) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஆண்டு குத்தகை) (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | சிவிக்னேஷ்.,<br>த/பெசின்னதம்பி ., தேனி. | - | - |
| 2 | இமதன்.,<br>த/பெஇளங்கோ ., தேனி. | - | - |
| 3 | பபொன்மணி.,<br>த/பெபரமன் ., தேனி. | - | ரூ:8,76,000/- |

<u>**அலுவலக குறிப்பு**</u>:

அ) மேற்கண்ட குத்தகை இனத்திற்கு வரிசை எண்: 03-ல் கண்ட **திரு.ப.பொன்மணி** என்பவர் ஆண்டு குத்தகையாக **ரூ:8,76,000/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகையினை விடரூ :4,43,489/-கூடுதலாகவும் மற்றும் மூன்றாண்டு சராசரி தொகையினை விட ரூ :4,43,758/- கூடுதலாகவும் உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2996/2026/அ3)

**தீர்மான எண்**: 1288 ,,
**தீர்மானம்**: **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>**பொருள் 27**</u> **:**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய மெயின் பிளாக் வடக்கு பக்கம் கட்டண கழிப்பறை ( மதுரை பேருந்து நிறுத்தம் அருகில்)**குத்தகை இனத்திற்கு 09-07-2026 அன்று நடைபெற்ற பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் கோரிய ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உட்சபட்ச ஏலக்கேள்வி (ஆண்டு குத்தகை) (ரூபாய்) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஆண்டு குத்தகை) (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | தேவாசிமலை.,<br>த/பெ தேவசாமி,<br>கருக்கட்டான்பட்டி,<br>உசிலம்பட்டி, மதுரை மாவட்டம். | - | ரூ:16,05,000/- |
| 2 | கதனசீலன்.,<br>த/பெ கருத்தப்பாண்டி,<br>பண்ணைப்பட்டி<br>உசிலம்பட்டி, மதுரை மாவட்டம். | - | ரூ:16,00,000/- |

**அலுவலக குறிப்பு**:

அ) மேற்கண்ட குத்தகை இனத்திற்கு வரிசை எண் : 01-ல் கண்ட **திரு. தே.வாசிமலை** என்பவர் ஆண்டு குத்தகையாக **ரூ:16,05,000/-**உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகையினை விடரூ:1,93,800/-கூடுதலாகவும் மற்றும் மூன்றாண்டு சராசரி தொகையினை விட ரூ:2,59,933/-கூடுதலாகவும் உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3000/2026/அ3)

**தீர்மான எண்**: 1289 ,,
**தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**ருள் 28 :**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய மெயின் பிளாக் தெற்கு பக்கம் இருசக்கர வாகன ( போடி பேருந்து நிறுத்தம் அருகில்) நிறுத்துமிடம்** குத்தகை இனத்திற்கு 09-07-2026 அன்று நடைபெற்ற பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் கோரிய ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உட்சபட்ச ஏலக்கேள்வி (ஆண்டு குத்தகை) ர)ூபாய்( | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஆண்டு குத்தகை) (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | செராஜகுமாரன்.,<br>த/பெ செல்வரங்கு,<br>வார்டு 3,9 ஐயப்பன் கோவில் தெரு,<br>சீப்பாலக்கோட்டை. | ரூ:12,75,000/- | - |
| 2 | அரவிவர்மா.,<br>த/பெ அன்பழகன்,<br>207 A-164 சுப்பன் தெரு,<br>ராகவரன் காலனி, தேனி. | ரூ:12,80,000/- | - |
| 3 | பாபழனிக்குமார்.,<br>த/பெ பாலசுப்பிரமணி<br>உசிலம்பட்டி,மதுரை மாவட்டம். | - | ரூ:5,80,000/- |

**அலுவலக குறிப்பு**:

அ) மேற்கண்ட குத்தகை இனத்திற்கு வரிசை எண்: 02-ல் கண்ட **திரு.அ.ரவிவர்மா** என்பவர் ஆண்டு குத்தகையாக **ரூ:12,80,000/-** உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ளார். மேற்கண்ட தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகையினை விட ரூ :1,71,987/- கூடுதலாகவும் மற்றும் மூன்றாண்டு சராசரி தொகையினை விட ரூ :2,40,579/- கூடுதலாகவும் உள்ளதால் மேற்கண்ட ஏலக்கேள்வியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2998/2026/அ3)

**தீர்மான எண்**: 1290 ,,
**தீர்மானம்**: **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் 29 :**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய செகண்டரி பிளாக் வடக்கு பக்கம் கட்டண ( திண்டுக்கல் பேருந்து நிறுத்தம் அருகில்) கழிப்பறை**குத்தகை இனத்திற்கு 09-07-2026 அன்று நடைபெற்ற பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் கோரிய ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உட்சபட்ச ஏலக்கேள்வி (ஆண்டு குத்தகை) (ரூபாய்) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஆண்டு குத்தகை) (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | நஇளங்கோவன்.,<br>த/பெ நடராஜன்,<br>பண்ணைப்பட்டி<br>உசிலம்பட்டி, மதுரை மாவட்டம். | - | ரூ:12,87,750/- |
| 2 | பாபழனிக்குமார்.,<br>த/பெ பாலசுப்பிரமணி<br>உசிலம்பட்டி,மதுரை மாவட்டம். | - | ரூ:13,25,000/- |

**அலுவலக குறிப்பு**:

